# பயனாளிக்கு காப்பீட்டு உதவித்தொகை




▶ கோவை தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகத்தின் பெரியநாயக்கன்பாளையம் கிளை சார்பில், பயனாளி ஒருவருக்கு கோவை மண்டல துணை இயக்குனர் கார்த்தி கேயன் உதவித் தொகைக்கான காசோலையை வழங்கினார்.

**கோவை, அக். 29:** கோவை தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகத்தின் பெரியநாயக்கன்பாளையம் கிளை அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதியில் செயல்பட்டு வரும் தனியார் பேக்கிங் நிறுவனத்தில் பணிபுரிந்த தொழிலாளி ராஜேந்திரன் என்பவர் கடந்த பிப்ரவரி மாதம் பணியில் இருந்தபோது மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார். அவரது குடும்பத்திற்கு தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகம் சார்பில் உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி பெரியநாயக்கன்பாளையம் கிளை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

தொழிலாளர் அரசு காப்பீட்டு கழக கோவை மண்டல இணை இயக்குனர் (பொ) ரவிக்குமார் உத்தரவின் பேரில் முதல் தவணையாக ரூ.69 ஆயிரத்து 404 தொகையும், ஓய்வூதிய பலன்களுக்கான ஆணையும் இறந்த ராஜேந்திரன் குடும்பத்தினரிடம் தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகம் கோவை மண்டலத்தின் துணை இயக்குநர் கார்த்திகேயன் வழங்கினார். நிகழ்ச்சியில் வருங்கால வைப்பு நிதி ஆணையர் வைபவ் சிங், பெரியநாயக்கன்பாளையம் கிளை மேலாளர், கிளை அலுவலர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## பணியின்போது இறந்ததொழிலாளரின் குடும்பத்துக்கு

# தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகம் நிதி உதவி

கோவை, அக்.29-

பெரியநாயக்கன்பாளையம் பகுதியில் உள்ள ஒரு பேக்கிங் நிறுவனத்தில் பணிபுரிந்த ராஜேந்திரன் என்பவர் கடந்த பிப்ரவரி மாதம் பணியில் இருந்தபோது மாரடைப்பு ஏற்பட்டு இறந்தார். அவரது குடும்பத்துக்கு தொழிலாளர் அரசு காப்பீட்டு கழக திட்டத்தின் கீழ், பணியில் இருக்கும்போது ஒருவர் மரணம் அடைந்தால், அவரின் குடும்பத்தாருக்கு கடைசியாக பெற்ற ஊதியத்தில் மனைவி மற்றும் சார்ந்திருப்போருக்கு வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அதன்படி கோவை மண்டல இணை இயக்குனர் (பொறுப்பு) ரவிக்குமாரின் ஆணையின்படி, ராஜேந்திரனின் குடும்பத்திற்கு பெரியநாயக்கன்பாளையத்தில் நடைபெற்ற இ.எஸ்.ஐ. மற்றும் தொழிலாளர் வைப்புநிதி ஆணையம் இணைந்து நடத்திய குறைதீர்ப்பு முகாமில் உதவித்தொகையில் முதல் நிலுவை தவணையாக ரூ.69 ஆயிரத்து 404-ஐ துணை இயக்குனர் கார்த்திகேயன் வழங்கினார். இதன்படி மாதாந்திர உதவித்தொகையாக ரூ.8,929 நிர்ணயம் செய்து வழங்கப்படும். இந்த நிகழ்ச்சியில் வருங்கால வைப்புநிதி ஆணையாளர் வைபவ் சிங் மற்றும் பலர் கலந்துகொண்டனர். உதவித்தொகையை பெற்றுக்கொண்ட குடும்பத்தினர் நன்றி தெரிவித்தனர்.